**தலைப்பு 016 – பாராளுமன்றம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 016 – பாராளுமன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்றத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பவை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட பரந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

### 2.1.1 நிதிஏற்பாட்டுப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இற்கு இணங்க மதிப்பீட்டு முடியுமான வரை பூரணமாக மற்றும் சரியாக தயாரிக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த 06 மீண்டெழும் செலவின விடயங்களிலிருந்து ரூபா 74,000,000 ஆன ஏற்பாடு வேறு 05 மீண்டெழும் செலவின விடயங்களிற்கு மற்றும் மூலதன செலவின விடயமொன்றிற்கு நி.பி. 66 ஊடாக மாற்றப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் நாட்டில் நிலவிய பணவீக்கம் காரணமாக செலவின மதிப்பீட்டின் கீழ் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்த பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலை மட்டங்கள் அதிகரித்த போதும் பாராளுமன்ற நடவடிக்கைகளை தடையின்றி நடாத்திச் செல்ல முன்னுரிமை வழங்கி செலவிட வேண்டிய செலவிற்காக தேவையான ஏற்பாடுகளை மாற்றிக் கொள்ள நேர்ந்ததாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் சரியாக மதிப்பீட்டை தயாரிக்க உச்ச முயற்சி எடுக்க வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி கணனி அச்சீட்டு SA 92 மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (இணைப்பு iii இல்) பொறுப்பாக உள்ளடக்கி இருக்காத மீளாய்வாண்டிற்கு உரிய 08 செலவின விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 9,486,836 ஆன பொறுப்புக்கள் 2023 ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் விபரங்களை தேடிக்கொள்ள முடியாது போன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமானங்களை பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கி இல்லாததுடன் எதிர்காலத்தில் இந் நிலைமை குறைவடையும் வகையில் நடவடிகககை எடுக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள் விதிகள் மற்றும பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்.

மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள் | | |
| (அ) | 2013 திசெம்பர் 30 இன் 234/2013 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2 பந்தி | - | அரச கணக்குகள் திணைக்களத்தினால் சம்பளம் தயாரிப்பதற்காக அறிமுகப்படுத்தி உள்ள GPS கணனி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பதிலாக ஏனைய கணனி நிகழ்ச்சியொன்று பயன்படுத்துவதாயின் அது தெடர்பாக அறிக்கையொன்றை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற வேண்யதுடன், பாராளுமன்றத்தினால் சம்பளம் தயாரிப்பதற்காக பயன்படுத்திய செயற்திட்டத்திற்காக பெற்றுக ்கொண்ட அங்கிகாரம் சமர்ப்பிக்கப்படவில்லை . | இந்த தொகுதி தொடர்பாக பாராளுமன்றத்தின் அலுவலர்கள் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சென்று உரிய தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை சமர்ப்பித்து வாய் மூலம் அங்கீகாரத்தை பெற்றுள்ளனர். | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1985 மே 10 ஆம் திகதிய இலக்கம் 289 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | அரச வாகனங்களில் அரச இலட்சினை பொறிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும், பாராளுமன்ற அனைத்து வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடந்த காலத்தில் எழுந்த நிலைமையின் மீது கிடைந்த பாதுகாப்பு ஆலோசனை பிரகாரம் வாகனங்களில் பொறித்திருந்த ''செங்கோள்'' இலட்சினையை தற்காலிகமாக அகற்ற நேர்ந்தது. பாதுகாப்பு குழுவிற்கு முன்வைத்து கிடைக்கும் ஆலோசனை பிரகாரம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் செயற்படும் இயலுமையை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

மீளாய்வாண்டிற்காக மதிப்பீட்டு செலவினம் ரூபா 743,759,062 ஆன பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை வழிகாட்டி இலக்கம் 13 இன் 4 பந்தி பிரகாரம் உரிய படிவத்தில் பெறுகைகள் திட்டத்தை தயாரித்திருக்காததுடன் அதன் 4.2.1 பிரகாரம் தயாரிக்க வேண்டிய விரிவான பெறுகைகள் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன்.<br><br>2023 ஆண்டிற்காக சமர்பித்துள்ள பெறுகைகள் திட்டம் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 படிவம் பிரகாரம் சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை வழிகாட்டிகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சமர்ப்பித்திருந்த பெறுகைகள் திட்டத்தில் 34 மூலதன விடயங்களிற்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 551,192,552 ஆனது. மீளாய்வாண்டின் மொத்த மூலதன ஏற்பாடு ரூபா 132,000,000 ஆன போதும் திருத்திய பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. அவ்வாறே ஆண்டு இறுதித் திகதி பெறுகைகள் திட்டத்தின் முன்னேற்றத்தை சமர்பிக்காத காரணத்தால் அதன் | ஏற்றுக் கொள்கிறேன்.<br><br>சுற்றறிக்கை மூலம் மூலதன செலவுகள் மட்டுப்படுத்த பட்டமையினால் முக்கிய பெறுகைகள் மாத்திரம் 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் பெறுகைகள் திட்டத்தை திருத்த முடியவில்லை.<br><br>2022 செயலாற்றுகை | திருத்திய பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வினைத்திறனை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது. | அறிக்கையை தயாரிக்கும் போது பெறுகைகள் திட்டத்தின் முன்னேற்றத்தை தயாரித்திருந்த போதும் அதனை கணக்காய்விற்கு சமரப்பிக்க முடியவில்லை. | |

**3.2 சொத்துக்கள் முகாதைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 இன் 01/2020 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 11.1 பந்தியின் தொடர் இலக்கம் 06 பிரகாரம் 2022 ஆண்டிற்குரிய பண்டகக் கணிப்பீட்டு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆண்டிற்காக சபாநாயகர் உத்தியோகபூர்வ இல்லம், மாதிவல 108 உத்தியோகபூர்வ இல்லங்கள், நுவரஎலிய செம்பதி மெதுர சுற்றுலா விடுதி மற்றும் அநுராதபுர மெத் செவன சுற்றுலா விடுதிக்குரிய பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். <br><br> நடைமுறை காரணங்களால் சில கால தாமதங்கள் ஏற்பட்ட போதும் அதனை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் பண்டக கணிப்பீட்டை நாளாதுவரையாக மேற்கொண்டு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2017 மே 04 திகதிய 02/2017 இலக்க இணைந்த சேவைகள் சுற்றறிகை மற்றும் 2016 திசெம்பர் 22 திகதிய தேசிய நூலக மற்றும் ஆவண சேவைகள் சபையின் 2004/நூசே/1(2016-திருத்திய) இலக்க சுற்றறிக்கையின் 3.1 பிரிவு பிரகாரம், நூலகங்களிற்கு கையேற்கப்படும் ஆவண, அச்சு, செவிப்புலன் மற்றும் இலத்திரனியல் ஊடகம் உள்ளிட்ட நூலக பொருட்கள், தொடர்பாக நடாத்த வேண்டிய வருடாந்த கணிப்பீடு, பாராளுமன்ற் உறுப்பினர்களின் நூலகம் தொடர்பாக மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். <br><br> வருடாந்த கணிப்பீட்டினை மேற்கொள்ள நடைமுறை கடினம் உள்ளதால் நூலக அதிபர் பதவிக்காக புதிய நியமனம் ஒன்றை வழங்கும் சந்தர்ப்பங்களில் கணிப்பீட்டை நடாத்துவதுடன் 2023 ஆண்டிற்காக வருடாந்த கணிப்பீட்டை நடாத்த திட்டமிடுகிறேன். | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 முகாதைத்துவ பலவீனங்கள்

### 3.3.1 உத்தியோகபூர்வ இல்லங்களிற்கான வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1993 மே 28 திகதி நடாத்தப்பட்டிருந்த இல்ல செயற்குழு கூட்ட அறிக்கை பிரகாரம் மாதிவெல இல்ல கட்டிடத் தொகுதியின் உத்தியோகபூர்வ இல்லங்களிற்காக 1993 ஆண்டு முதல் அறவிடப்படும் ரூபா 1,000 ஆன இல்ல வாடகை தொகையை திருத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும்.<br><br>இல்ல கட்டிடத் தொகுதியில் மேற்கொள்ளவுள்ள உத்தேச திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் இல்ல வாடகையை அதிகரிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்க 2023 ஏப்ரல் 04 திகதி இடம்பெற்ற இல்ல செயற்குழு கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. | இல்லங்களின் பெறுமதியை மதிப்பிட்டு வாடகை தொகையை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாதிவெல இல்லங்களை வழங்கும் போது பாராளுமன்ற பொது செயலாளருடன் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கை பிரகாரம் பாராளுமன்ற அங்கத்துவம் முடிவடைந்தவுடனே உத்தியோகபூர்வ இல்லங்களை வெறிதாக்கி மீண்டும் ஒப்படைக்க வேண்டியதுடன், அவ்வாறு உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்காத காலத்திற்காக 06 அங்கத்தவர்களிடமிருந்து ஒரு நாளைக்கு ரூபா 500 வீதம் தண்டப்பணம் மற்றும் அறவிட வேண்டிய மின்சாரம், நீர் பட்டியல்கள் உள்ளடங்களாக ரூபா 455,904 தொகையை கணக்காய்வு திகதிய 2022 நவம்பர் 15 திகதியளவிலும் அறவிட இயலுமாக இருக்கவில்லை. | 2023.03.22 திகதி இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தை அறிவூட்டியுள்ளதுடன் வழக்கு தாக்கல் செய்ய அதன் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | உடன்படிக்கை பிரகாரம் பாராளுமன்ற அங்கத்துவம் முடிவடைந்தவுடனே உத்தியோகபூர்வ இல்லங்களை வெறிதாக்கி மீண்டும் பெற்றுக் கொள்ள மற்றும் குறித்த கட்டணத்தை விரைவில் அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 19 திகதிய 20/1997/302/028 இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மாதிவெல உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுக் கொள்ள முடியாது போன அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் ரூபா 75,000 செலுத்தப்படுவதுடன் 2021 ஆண்டில் 10 அங்கத்தவர்களுக்கு மற்றும் 2022 செப்டம்பர் மாதம் வரை 08 அங்கத்தவர்களுக்கு முறையே ரூபா 6,750,000 மற்றும் ரூபா 4,875,000 அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானதாகும்.<br><br>இல்ல உரிமை பெறும் ஒவ்வொறு அங்கத்தவர்களுக்கும் மாதிவெல இல்ல கட்டிடத் தொகுதியில் நிலவும் எல்லையினுள் இல்லமொன்றை கூடிய விரைவில் வழங்க ஆளணிக்கு ஆலோசனை வழங்கினேன். | பாராளுமன்ற அங்கத்துவம் முடிவடைந்தவுடனே உத்தியோகபூர்வ இல்லங்களை வெறிதாக்கிக் கொள்ள தேவையான செயற்பாடுகளை எடுப்பதன் ஊடாக செலுத்தும் இல்ல |

| | | | |
|---|---|---|---|
| | | | வாடகையை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஈ) | மாதிவெல உத்தியோகபூர்வ இல்லங்களின் நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி பட்டியல்களிற்காக வைப்பாக அறவிடும் ரூபா 1,000 ஆன தொகையை, காலரீதியாக மீளாய்வு செய்து திருத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும்.<br><br>எதிர்காலத்தில் நடக்கும் இல்ல செயற்குழுவிற்கு விடயங்களை சமரப்பித்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | பட்டியல்களிற்காக வைப்பாக அறவிடும் கட்டணத்தை காலரீதியாக மீளாய்வு செய்து திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (உ) | 2020 நவம்பர் 25 திகதி நடாத்தியிருந்த ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது இல்ல செயற்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தவாறு அந்த அந்த அமைச்சுக்களினால் அரச வங்களா வீடு வழங்கப்பட்டுள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் மாதிவெல இல்க கட்டிடத் தொகுதியில் பெற்றுக் கொண்டுள்ள அங்கத்தவர் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் ஒப்படைத்து மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளரினால் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து அவ் இல்லங்களை வெறிதாக்கிக் கொள்ள நடவடிக்கை வேண்டிய போதும், கணக்காய்வு திகதி 2023 மே 16 திகதியளவிலும் மூன்று அமைச்சர்கள் மாதிவெல அங்கத்தவர் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் ஒப்படைக்க நடவடிககை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும்.<br><br>குறித்த உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் பாராளுமன்றத்திற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து 2023 ஏப்ரல் மாதம் 04 திகதிய மதிப்பிற்குரிய சபாநாயகரின் கையொப்பத்துடன் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அடுத்த இல்ல செயற்குழுவில் மதிப்பிற்குரிய சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டுவர எதிர்பார்க்கப்படுகிறது. | இல்ல செயற்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு இருந்தவாறு உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவருக்கு அம்பாற மாவட்ட செயலகத்தினால் வழங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக அறவிட வேண்டிய இல்ல வாடகை ரூபா 27,857 தொகையை அவரின் அங்கத்தவ படியிலிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும்.<br><br>பாராளுமன்றத்திற்கு வெளியிலான நிறுவனமொன்றின் ஊடாக இந்த இல்லம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந்த தொகையை அறவிட மதிப்பிற்குறிய அங்கத்தவரின் எழுத்துமூல விருப்பை பெற்றுக் கொள்ள பாராளுமன்ற நிதி மற்றும் கணக்கு பணியகத்தினூடாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய இல்ல வாடகை தொகையை அங்கத்தவ படியிலிருந்து அறவிட்டு மாவட்ட செயலகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3.2 ஊழியர் கடன் மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணித்தடை செய்த இரண்டு அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 398,701 ஆன கடன் மீதி 06 ஆண்டுகளை விஞ்சியிருந்தது. | சேவைக் காலம் 10 ஆண்டுகளிலும் அதிகமாகையால் பிணையாளர் இன்றி செலுத்தியுள்ளதுடன் பாராளுமன்ற சங்கமொன்றில் ஏற்பட்ட பண மோசடி தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்கள விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் அவர்களிடமிருந்து இத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க இயலாதுள்ளது. | அறவிட வேண்டிய கடன் மீதிகளை தாமதமின்றி தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மற்றும் தனிநபர் மீதி வகைப்படுத்தும் பொழிப்பின் கூட்டுத் தொகைக்கிடையில் ரூபா 43,051 ஆன வித்தியாசமொன்றானதுடன் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் அவ் வித்தியாசம் முறையே ரூபா 125,845 மற்றும் ரூபா 43,022 ஆக இருந்தது. | இவ் வித்தியாசத்தை இனங்காண முயற்சிக்கப்படுகின்றது. | திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் தனிநபர் மீதி வகைப்படுத்தும் பொழிப்பு சமமாகி இருக்க வேண்டும் |

### 3.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கையின் 3.4 மற்றும் 3.5 பந்திகளில் காட்டப்படும் “நிவாரண அடிப்படையில் மோடார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பாக 2018 பெப்ரவரி 15 இன் 01/2018 இலக்க, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் 1.2 பந்தி பிரகாரம் மற்றும் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பொது செயலாளரிற்கு | வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துமூல அங்கீகாரத்தின் மீது பாராளுமன்றத்தின் சிரேஷ்ட அலுவலர்களுக்கு நிவாரண அடிப்படையில் மோடார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்கும் செயன்முறை நீண்ட காலமாக கடைபிடிக்கப்பட்டு வருவதுடன் அது தொடர்பாக கணக்காய்வு ஐயவினாவின் மூலம் எமது | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| வெளியிட்டிருந்த, இலக்கம் TIP/SS/01/84 மற்றும் 2019 ஏப்ரல் 25 திகதிய கடிதத்திற்கு முரணாக, “சிரேஷ்ட மட்டம்” இற்குரிய நிறைவேற்று பதவியொன்றில் ஆறு ஆண்டுகால (06) தொடர்ச்சியான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்காத பாராளுமன்ற ஆளணியின் மூன்று அலுவலர்களுக்கு நிவாரண அடிப்படையில் மோடார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்குதல்”. தொடர்பான முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கவனத்திற்கு கொண்டு வந்ததன் பின்னர் மீண்டும் அது தொடர்பாக வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்திடம் நேரடி தெளிவுபடுத்தல் ஒன்றை மதிப்பிற்குரிய சபாநாயகர் மற்றும் நிதி அமைச்சரின் தலையீட்டுடன் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் அந்த அடிப்படையில் பாராளுமன்றத்தின் சிரேஷ்ட அலுவலர்களுக்கு நிவாரண அடிப்படையில் மோடார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்கும் முறை தற்போது தடைசெய்யப்பட்டுள்ளது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 அங்கீகார ஆளணி மற்றும் உள்ளவாறான ஆளணி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று பாராளுமன்ற பொதுச் செயலாளரின் ஆளணியின் அங்கீகார ஊழியர் எண்ணிக்கை 995 மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 861 ஆனது. நிறுவனத்தின் சிரேஷ்ட மட்டத்தில், மூன்றாம் மட்டத்தில், இரண்டாம் மட்டத்தில் மற்றும் ஆரம்ப மட்டத்தில் பதவிகள் முறையே 03, 40, 52 மற்றும் 41 ஆக மொத்த வெற்றிட எண்ணிக்கை 136 ஆனது. | இலக்கம் 2022/03 மற்றும் 2022/4/26 திகதிய தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை பிரகாரம் ஊழியர் ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள போதும் பாராளுமன்ற ஆளணி தொடர்பான ஆலோசனை செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட விஷேட அங்கீகாரத்தின் மீது முக்கியத்துவ அடிப்படையில் 2022 ஆண்டினுள் 48 ஊழியர்களையும் 2023 ஆண்டினுள் 28 ஊழியர்களும் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். | செயலாற்றுகையிற்கு பாதகமான முறையில் தாக்கம் செலுத்தும் முக்கிய பதவிகளின் வெற்றிடங்ளை நிரப்ப அல்லது அவ்வாறு இல்லையெனில் ஆளணியை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆங்கீகார அமைய/தற்காலிக ஊழியர் எண்ணிக்கை 8 ஆன போதும் நிறுவனத்தின் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 10 ஆனதில் அங்கீகார ஆளணியை விஞ்சி இரண்டு ஊழியர்கள் ஆட்சேர்கக்ப்படிருந்தனர். | நிறுவனத்தின் உள்ளவாறான அமைய மற்றும் தற்காலிக ஊழியர் எண்ணிக்கை 10 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது அமைய 05 மற்றும் ஏனைய 05 என ஆகும். | ஆங்கீகார ஊழியர் எண்ணிக்கையை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 தொலைத் தொடர்பு திணைக்களத்திற்கான ஆட்சேர்ப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு தேவையான ஆளணி, உத்தேச சம்பளத்திற்கு சமமான மாதாந்த படியொன்றின் மீது ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் 4 வகை பதவிகளிற்கு நிரந்தர அடிப்படையில் 14 அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டு இருந்தனர் | திணைக்களத்தின் பதவிகளை நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடன் கூடிய பதவிகளாக்கிக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டும். |

### 4.3 உதவி நூலக அதிபர் பதவிற்கான ஆட்சேர்ப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாராளுமன்ற உதவி நூலக அதிபர் பதவிற்காக அலுவலர்களை ஆட்சேர்க்க விண்ணப்பம் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி வர்த்தமானியில் குறிப்பிட்டிருக்கையில் அதற்கு முரணாக, 2021 மே 03 திகதி முதல் 17 திகதி வரை கிடைத்திருந்த 06 விண்ணப்பங்களின் விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துமூல பரீட்சைக்கு அழைபிக்கப்பட்டு இருந்தனர். | அவதானிப்பு சரியானதாகும்.<br><br>நாட்டில் நிலவிய கொவிட் தொற்கு நிலைமை காரணமாக சேவைகள் உரிய முறைப்படி செயற்படும் நிலையில் இருக்காத காரணத்தால் ஏப்ரல் 30 திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலிற்கு அனுப்பப்பட்ட 02 விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய 04 விண்ணப்பங்கள் அரச நிறுவன தலைவர்கள் 30 திகதிக்கு முன்னர் கையொப்பம் இட்டுள்ளதால் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | வர்த்தமானி அறிவித்தலிற்கு இணங்க ஆட்சேர்ப்பு முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நேர்முகப் பரீட்சை சபையினால் அனுபவத்திற்காக 25 புள்ளிகள் ஒதுக்கி இருந்த போதும், 07 அலுவலர்களுக்காக வழங்கியிருந்த புள்ளி அளவுகளை மீளாய்வு செய்யும் போது உரிய ஓர் அடிப்படையில் முறையாக புள்ளிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சேவை அனுபவம் தொடர்பாக பதிப்பிடுகையில் எழுத்துமூல சான்றுதழ்களை போன்று வாய்மூலமும் விண்ணப்பதாரர் களுடன் விடயம் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளினூடாக அவர்களின் விடயம் தொடர்பான துறையையும் நேர்முக பரீட்சை சபையினால் கவனத்திற்கு எடுத்திருந்தது. அவ் அடிப்படையில் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ள | ஆட்சேர்ப்பு திட்டத்தில் அனுபவத்திற்காக உரிய மற்றும் முறையான புள்ளி வழங்கும் முறைமையொன்றை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வாறு பல புள்ளி வீச்சளவுகள் கிடைத்துள்ளன. | |
| (இ) | மேலதிக தகைமைகளுக்காக 25 மொத்த புள்ளிகள் ஒதுக்கியிருந்த போதும் அப்புள்ளி பகிர்ந்தளித்திருந்த முறை சரியானதாக இருக்கவில்லை. | கணக்காய்வினால் இனங்கண்டுள்ள புள்ளி வழங்கும் முறைமை சரியானதாக காணப்படுவதுடன் நேர்முகப் பரீட்சை சபையினால் பின்பற்றியுள்ள முறைமை கடிதக் கோவையில் மேலும் விபரித்திருந்தால் அது மேலும் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க காரணமாகும். | தகைமைக்காக புள்ளிவழங்கல் ஒழுங்கான முறைமை ஒன்றின் கீழ் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரியின் அடிப்படை கல்வித் தகைமையை மேலதிக தகைமையாக கவனத்திற் கொண்டு புள்ளி வழங்கப்பட்டிருந்ததுடன் அத் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் சரியான தன்மையை உறுதி செய்து கொண்டிருக்கவில்லை. | சான்றிதழ்களின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அடிப்படை தகைமை மற்றும் மேலதிக தகைமைகளை சரியான இனங்காண வேண்டியதுடன் தகைமைகளை உறுதி செய்து கொள்ள சான்றிதழ்களின் சரியான தன்மையை உறுதி செய்யது கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | தெரிவு செய்யப்பட்டிருந்த இரண்டு அலுவலர்களின் ஒரு அலுவலரிற்கு 02 மாதங்களும் 23 நாட்களின் பின்னர் அதாவது, 2022 ஜுன் 27 ஆம் திகதி பணியை கையேற்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அவதானிப்பு சரியானது. | ஆட்சேர்ப்பு தேவைபாட்டின் பிரகாரம் தாமதமின்றி சேவைக்கு அறிக்கையிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 இலக்க அரச செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பான தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 03 (vii) பந்தியிற்கு முரணாக ஒரு உதவி நூலக அதிபர் நியமனமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பாராளுமன்ற நடவடிடிக்கைகளை தடையின்றி பேணிச்செள்வதற்காக தேவையான வெற்றிடங்களை நிரப்ப ஆளணி ஆலோசனை செயற்குழு கூட்டத்தின் அங்கிகாரம் மற்றும் ஆலோசனை கிடைத்துள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |